<u>சமூக பாதுகாப்புத்துறை</u>

## மாவட்ட ஆட்சியர் செய்தி குறிப்பு

2015ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் மற்றும் விதிமுறைகளின்படி புதிதாக அமைக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் நீதி குழுமத்திற்கு சமூக நல உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இளைஞர் நீதி குழுமத்திற்கு ஒரு பெண் உட்பட 2 சமூக நல உறுப்பினர்கள் மூன்று வருட காலத்திற்கு மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர்.

குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவர் அல்லது குழந்தை உளவியல், மனநல மருத்துவம், சமூகவியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்ற தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும், 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும். ஒரு குழுமத்தில் அதிகபட்டசமாக ஒரு நபர் இருமுறை மட்டுமே பதவி வகிக்க தகுதி உடையவர்களாவர், ஆனால் தொடர்ந்து இருமுறை பதவி வகிக்க இயலாது.

தகுதிவாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த விண்ணப்ப படிவத்தை நாகப்பட்டினம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது மயிலாடுதுறை மாவட்ட இணையதளத்திலிருந்து (https://mayiladuthurai.nic.in/) பதிவிறக்கம் செய்து **மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, அறை எண்.209, இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் - 611003** என்ற முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 24 – டிசம்பர் - 2021 (24.12.2021)-ஆம் தேதிக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமணம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது.

மேலும் விபரங்களுக்கு, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அறை எண்.209, இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என்ற முகவரியில் நேரிலோ அல்லது 04365 253018, 8015222327 ஆகிய எண்களுக்கும் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
மயிலாடுதுறை

# DEPARTMENT OF SOCIAL DEFENCE

## Press Release by the District Collector

Applications are invited by the Department of Social Defence from the eligible candidates who possesses the following qualifications for appointment of Social Worker Members of the Juvenile Justice Board, Mayiladuthurai District constituted under the provisions of Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015. Social Worker Members for Juvenile Justice Board is to be appointed on honorarium basis of which one shall be a women.

The applicants should have been actively involved in health, education or welfare activities pertaining to children for atleast seven years or a practicing professional with a degree in child psychology, psychiatry, Sociology or law. The age of the applicant should not be less than 35 years and not completed 65 years. A person shall be eligible for appointment as a social Worker Member for a maximum of two terms, which shall not be continues.

The application format and eligibility criteria may be obtained from the District Child Protection Unit of concern District and filled in application should be sent to the following address on or before 24 December 2021 (24.12.2021).

**The District Child Protection Officer, District Child Protection Unit, Room No.209, 2nd Floor, Collectorate, Nagapattinam – 611003**

The filled in applications should reach the above office within stipulated date. The appointment will be purely based on merit and experience, the decision of the Government will be final in this regard.

Further details, Contact District Child Protection Officer, Room No.209, 2nd Floor, Collectorate, Nagapattinam or 04365 253018, 8015222327.

District Collector,
Mayiladuthurai District